



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,

மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தர்மபுரம் ஊராட்சி, பெரியகாடு பகுதியில், மாநில நிதிக்குழு மானியம் 2015-16-ம் ஆண்டு,

மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் செலவில் புதியதாக கட்டப்பட்ட கலையரங்கத்தினை இன்று (07.08.2016) திறந்து வைத்தார்.

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு தலைவர் திரு. சேவியர் மனோகரன், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. எம்.எஸ். சாரதாமணி ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 502 /2016 நாள்: 07.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள், ரூ. 5 இலட்சம் செலவில் புதியதாக கட்டப்பட்ட கலையரங்கத்தினை இன்று (07.08.2016) திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தர்மபுரம் ஊராட்சி, பெரியகாடு பகுதியில், மாநில நிதிக்குழு மானியம் 2015-16-ம் ஆண்டு, மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் செலவில் புதியதாக கட்டப்பட்ட கலையரங்கத்தினை திறந்து வைத்து, கோவில் முன்பாக ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் பதிக்கப்பட்ட அலங்கார தரை கற்களை பார்வையிட்டு ஆய்வு செய்து, தெரிவத்தாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாசியுடன், பெரியகாடு ஊரில் ரூ.5 இலட்சம் செலவில் புதியதாக கட்டப்பட்ட கலையரங்கத்தினை இன்று (07.08.2016) திறந்து வைத்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. கடந்த சட்டமன்ற தேர்தலில் பெரியகாடு பகுதியில் உள்ள மக்களிடமிருந்து அ.இ.அ.தி.மு.க கட்சிக்கு அதிக வாக்குகள் கிடைத்துள்ளது. இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. மேலும் பெரியகாடு பகுதியிலுள்ள மக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை உடனடியாக அம்மா அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அனைத்து கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து விரைவில் தீர்வு காணப்படுவதோடு , அம்மாவின் ஆட்சியில் பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் எப்பொழுதுமே தயாராக இருக்கிறோம்.

எனவே பொதுமக்களாகிய நீங்கள், நடைபெற இருக்கும் உள்ளாட்சி தேர்தலில், அம்மா யாரை வேட்பாளராக அறிவிப்பார்களோ அவர்களை வெற்றிபெற செய்வதோடு, 100 சதவீதம் அ.இ.அ.தி.மு.க ஆட்சிக்கு வெற்றி சேர்திட உறுதுணையாக இருக்க வேண்டுமென தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில மீன்வள கூட்டுறவு தலைவர் திரு. எம்.சேவியர் மனோகரன், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. எம்.எஸ். சாரதாமணி, அரசு வழக்கறிஞர்கள் திரு.ஞானசேகர், திரு.செல்வகுமார், பெரியகாடு பங்குதந்தை எ.மரிய செல்வன், திரு.கனகராஜ், திரு.என்.என். ஸ்ரீஜயப்பன், இராஜக்கமங்கலம் கூட்டுறவு வீட்டுவசதி வாரிய சங்கத்தலைவர் திரு. கே.மணி, திரு.கனிஸ்டர், திரு.அகஸ்டின் கலிஸ்டஸ், ஆகியோர் உடனுள்ளனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.